# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 264/பேரூ/2022**
**நாள் : 15.03.2023**

திரு. J. பிரகாஷ்,
செங்கல்பட்டு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருப்போரூர் பேரூராட்சி. – எதிர் மனுதாரர்

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேரூராட்சி, பேருந்து நிலைய தெற்குபுறம், கடை எண்.13 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. J. பிரகாஷ் என்பவரது 20.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.12.2022 அன்று பெறப்பட்டு 264/பேரூ/2022 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேரூராட்சி, பேருந்து நிலைய தெற்குபுறம், கடை எண்.13 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. J. பிரகாஷ் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

> செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேரூராட்சி அலுவலக வணிக வளாகத்தில் கடை எண்.13ஐ குத்தகை அடிப்படையில் அரசு செயல்முறைக்கு உட்பட்டு பல ஆண்டுகளாக சிறு வியாபாரம் செய்து வருகிறேன். இந்நிலையில் குத்தகை காலம் 31.3.2022 அன்றுடன் முடிவடைந்ததால் 1.4.2022 முதல் 31.3.2025 வரையிலான குத்தகை உரிமத்திற்கு திருப்போரூர் பேரூராட்சியில் 8.3.2022 அன்று ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டது.
>
> அரசு விதிகளுக்குட்பட்டு எனது குத்தகை காலத்தை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பித்துத் தரும்படி கோரியிருந்தேன். மூன்று மாதங்களுக்கு மேலாகியும் எனது மனுவிற்கு செயல் அலுவலர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் வாடகைத் தொகையையும் வாங்க மறுத்ததை சுட்டிக்காட்டி

பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு கடந்த 16.06.2022 அன்று கடிதம் வாயிலாகத் தெரிவித்தும், கைபேசியில் பலமுறை தொடர்பு கொண்டு எங்களது குறையைக் கூறியும் எங்களுக்கு எவ்வித பதிலும் கிடைக்காததால் இவர்களின் செயல்பாடுகளைச் சுட்டிக் காட்டி கடந்த 11.07.2022 அன்று செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறைதீர்க்கும் மன்றத்தில் மனு கொடுத்தவுடன் பேரூராட்சியின் செயல் அலுவலரும் பேரூராட்சியின் கிளார்க்கும் என்னை அழைத்து நீ எங்கு சென்றாலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது. இந்தப் பேரூராட்சியில் நாங்கள் எடுக்கும் முடிவு தான் இறுதியானது. நாங்கள் என்ன முடிவு எடுத்தாலும் நீ ஏற்றுக்கொண்டுதான் போக முடியும் என்று என்னை மிரட்டும்படி போ, எங்களுக்கு எப்படி உங்கள் கடையை புதுப்பிக்க முடியும் என்று தெரியும் எனக் கூறினர். 01.04.2022 முதல் 31.03.2023 முடிய ஒரு வருட காலத்திற்கு, நான் நடத்தி வரும் கடையின் குத்தகை காலத்தைப் புதுப்பித்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பேரூராட்சியின் செயல் அலுவலர் ஒரு ஆண்டு கடையின் குத்தகை காலத்தை புதுப்பித்துக் கொடுத்து; அரசாணையின்படி செயல்படாமல் மேலே கூறியவாறு அவர் விருப்பப்படி செயல்பட்டதை குறித்து பேரூராட்சியின் இயக்குநர் அவர்களுக்கு தெரியப்படுத்தியும், கடை நடத்தும் எங்களுக்கு எவ்வித நியாயமும் கிடைக்கவில்லை. இந்நாள் வரை பேரூராட்சியின் அதிகாரிகளுக்கு இத்தனை கடிதம் அனுப்பியும் எவ்வித பதிலும் அவர்களிடமிருந்து நான் பெறவில்லை. ஆகவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பின் முறைமன்ற நடுவர் ஐயா அவர்களை நாடியுள்ளேன். இதுபோன்று ஆணைக்குப் புறம்பாக நடக்கும் அதிகாரிகளைத் தகுந்த விசாரணை செய்து நாங்கள் நடத்தி வரும் பேரூராட்சியின் குத்தகை காலத்தை அரசாணைக்குட்பட்டு மேலும் மூன்று ஆண்டுகளுக்குப் (01.04.2022 முதல் 31.03.2025 வரை) புதுப்பித்து எங்களின் வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்யுமாறு. ஐயா அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.12.2023 நாளிட்ட கடிதம் மூலம் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது :

திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 10.01.2023 நாளிடப்பட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார் :

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி அலுவலக வணிக வளாகத்தில் கடை எண்.13ஐ திரு. ஜே. பிரகாஷ் என்பவர் மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு எடுத்துள்ளார். நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை குத்தகைக்கு விடுதல் மற்றும் குத்தகையை புதுப்பித்தல் குறித்த அரசாணையில் திருத்திய நடைமுறைகள் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆணையில் ஒரே நேரத்தில் 3 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படலாம். 3 ஆண்டுகளை கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைந்ததன் பேரில் அக்குத்தகை தன்னியல்பாகவே (Automatically) புதுப்பிக்கப்படும். 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் உயர்த்தப்படும் இந்நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்.

9 ஆண்டுகளுக்கு பின்னர் குத்தகை வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும். தற்போதைய குத்தகைதாரருக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையிலான திருத்தி அமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவை நீட்டித்துக்கொள்ள முன்னுரிமை அளிக்கலாம். அவர் ஒப்புக்கொள்ளவில்லையானால் பொது ஏலத்தின் மூலம் ஏலத்திற்கு விடவேண்டும். குத்தகைதாரர்கள் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை குத்தகையை புதுப்பிக்க உரிய வீதங்களில் கட்டணம் செலுத்த வேண்டும் எனவும் இந்த ஆணைகள் பிறப்பிக்கப்படும் நாளிலிருந்து திருத்தி அமைக்கப்பட்ட வரம்பு நிபந்தனைகள் பொருந்தும் எனவும் திருத்திய நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி புதுப்பித்தல் கட்டணங்கள் செலுத்தப்படாத காரணத்தினால் 01.04.2022 முதல் 31.03.2025 வரை 3 ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக குத்தகைதாரர் தனது குத்தகை உரிமத்தினை அரசாணையின்படி புதுப்பித்துத்தர கேட்டுக்கொண்டதின் பேரிலும், பிற கடைகளின் குத்தகைதாரர்களும் தங்களது குத்தகை உரிமத்தினை புதுப்பித்துத்தர எழுத்து மூலம் தெரிவித்ததின் பேரிலும் 2022-2023-ஆம் ஆண்டுக்கு குத்தகை உரிமம் புதுப்பித்து தரப்பட்டுள்ளது. மேலும் 2022-23 முதல் 2024-25 முடிய உள்ள 3 ஆண்டுகள் கொண்ட ஒரு தொகுப்பான குத்தகை காலத்தினை பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ஆணையின்படி புதுப்பித்து உத்தரவிடப்பட்டுள்ளது என்பதனையும் மேலான தகவலுக்காக பணிந்து சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்திற்கு 12.01.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.01.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) 12.01.2023 அன்று மனுதாரர் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேருந்து நிலைய தெற்குபுறத்தில் அமைந்துள்ள வணிக வளாகம் கடை எண்.13ல் மின்சாதனங்கள் பழுதுபார்க்கும் கடையை பல வருடங்களாக குத்தகைக்கு எடுத்து நடத்தி வருகிறேன். எனது குத்தகைக் காலம் முடிவடைந்தவுடன் 12.3.2022 அன்று அரசாணையின்படி எனக்கு மேலும் 3 ஆண்டுகளுக்கு குத்தகையை புதுப்பித்திடுமாறு கோரியிருந்தேன். ஆனால், அரசாணையின்படி 3 ஆண்டுகளுக்கு குத்தகையை புதுப்பித்துத் தராமல், எனது கடைக்கு மேலும் ஒரு ஆண்டுக்கு மட்டும் அதாவது 31.3.2023 வரை குத்தகை புதுப்பிக்கப்பட்டது. இது குறித்து பேரூராட்சியில் பலமுறை புகார்கள் அளிக்கப்பட்டும், எனக்கு சரிவர பதில் அளித்திட செயல் அலுவலரும், பேரூராட்சி அலுவலர்களும் மறுத்துவிட்டனர்.

மேற்கண்ட குத்தகை புதுப்பித்தல் தொடர்பாக 3.12.2022 நாளிட்ட புகார் மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திற்கு என்னால் அனுப்பப்பட்டது. இதனையொட்டி 12.01.2023 அன்று நடைபெறும் விசாரணையில் என்னை ஆஜராகுமாறு கோரப்பட்டிருந்த நிலையில், மேற்கண்ட எனது கடைக்கு 10.1.2023 நாளிட்ட திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ஆணையின்படி

3 ஆண்டுகளுக்கு குத்தகையை புதுப்பித்துள்ளனர் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

5) எதிர்மனுதாரரான திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 12.01.2023 அன்று இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் (நநி4) துறை, நாள் 3.7.2007ன்படி செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேருந்து நிலைய தெற்குபுறத்தில் அமைந்துள்ள வணிக வளாகம் கடை எண்.13–க்கான கடை வாடகை ஒவ்வொரு ஆண்டிற்கும் 5 சதவீதம் உயர்த்தி 31.3.2023 வரை ஓராண்டு காலத்திற்கு குத்தகை நீட்டித்து வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. மேலும் மனுதாரர் திருப்போரூர் பேரூராட்சிக்கு அளித்துள்ள தனது 14.9.2022 நாளிட்ட மனுவில் மேற்கண்ட ஓராண்டு குத்தகை நீட்டிப்புக் காலத்தை 3 ஆண்டு காலத்திற்கு; அதாவது 2025ம் ஆண்டு வரையிலான காலத்திற்கு தனது கடைக்கான குத்தகையை புதுப்பித்திடுமாறு கோரியிருந்த நிலையில் அவருக்கு பேரூராட்சியின் செயல்முறை ஆணை நாள்:10.1.2023ன்படி 2022–23 முதல் 3 ஆண்டுகளுக்கு குத்தகை புதுப்பிக்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட குத்தகை தொடர்பாக ஏல அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், ஏலம் நடத்தப்படவில்லை என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக எனது 10.1.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 2.3.2013 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்காணும் கூடுதல் விவரங்களை சமர்ப்பித்துள்ளார்:-

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட பேரூராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கடை எண்.13, அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:3.7.2007ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி 2007-08ஆம் ஆண்டுமுதல் திரு. ஜே. பிரகாஷ் என்பவருக்கு குத்தகையினை கீழ்காணும் விவரப்படி நீட்டித்து வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | காலம் | தொகுப்பு |
|---|---|---|
| 1. | 2007–08 முதல் 2009–10 வரை | முதல் மூன்று ஆண்டுகள் தொகுப்பு |
| | 2010–2011 முதல் 2012–13 வரை | |
| | 2013–14 முதல் 2015–16 வரை | |
| 2. | 2016–17 முதல் 2018–19 வரை | இரண்டாம் மூன்று ஆண்டுகள் தொகுப்பு |
| | 2019–20 முதல் 2021 – 22 வரை | |
| 3. | 2022–23 முதல் 2024–25 வரை | |

எனவே திரு. ஜே. பிராகாஷ் என்பவருக்கு 2022-23 முதல் 2024-25 வரையிலான இரண்டாவது மற்றும் கடைசி மூன்று ஆண்டுகள் தொகுப்புகளாக குத்தகையினை நீட்டித்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் இதன் மூலம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

6) முறையீட்டு மனுதாரரின் மனு வாக்குமூலம், திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது புகார் மனுவில் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேருந்து நிலைய தெற்குபுறத்தில் அமைந்துள்ள வணிக வளாகம் கடை எண்.13ல் மின்சாதனங்கள் பழுதுபார்க்கும் கடையை பல வருடங்களாக குத்தகைக்கு எடுத்து நடத்தி வருவதாகவும் குத்தகைக் காலம் முடிவடைந்தவுடன் 12.3.2022 அன்று அரசாணையின்படி மேலும் 3 ஆண்டுகளுக்கு குத்தகையை புதுப்பித்திடுமாறு கோரியிருந்ததாகவும் ஆனால், அரசாணையின்படி 3 ஆண்டுகளுக்கு குத்தகையை புதுப்பித்துத் தராமல், கடைக்கு மேலும் ஒரு ஆண்டுக்கு மட்டும் அதாவது 31.3.2023 வரை மட்டும் குத்தகை புதுப்பிக்கப்பட்டது எனவும் இது குறித்து பேரூராட்சியில் பலமுறை புகார்கள் அளிக்கப்பட்டும், சரிவர பதில் அளித்திட செயல் அலுவலரும், பேரூராட்சி அலுவலர்களும் மறுத்துவிட்டனர் எனவும் மேற்கண்ட குத்தகை புதுப்பித்தல் தொடர்பாக 3.12.2022 நாளிட்ட புகார்மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திற்கு தன்னால் அனுப்பப்பட்டது எனவும் இதனையொட்டி நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு கோரப்பட்டிருந்த நிலையில், மேற்கண்ட கடைக்கு 10.1.2023 நாளிட்ட திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ஆணையின்படி 3 ஆண்டுகளுக்கு குத்தகையை புதுப்பித்துள்ளனர் என்கின்ற விவரத்தை தெரிவித்துள்ளார்.

திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர், அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள் 3.7.2007ன்படி செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேருந்து நிலைய தெற்குபுறத்தில் அமைந்துள்ள வணிக வளாக 13ம் எண் கடையினை மனுதாரருக்கு பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ஆணை நாள்:10.1.2023ன்படி, 2022–23 முதல் 3 ஆண்டுகளுக்கு குத்தகை புதுப்பிக்கப்பட்டுவிட்டது எனவும் மேற்கண்ட குத்தகை தொடர்பாக ஏல அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தது எனவும், ஆனால், ஏலம் நடத்தப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அரசாணை நிலை (எண்)92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:3.7.2007ல் வெளியிடப்பட்ட ஆணைகளில், பிறவற்றுள், உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள் ஒரே நேரத்தில் 3 ஆண்டு காலத்திற்கு குத்தகை விடப்படலாம் எனவும் 3 ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவு முடிவடைந்தவுடன் அக்குத்தகை தன்னியல்பாகவே (Automatically) 15 சதவீதம் குத்தகைத் தொகை உயர்த்தப்பட்டு

புதுப்பிக்கப்படும் எனவும் இவ்வாறு 9 ஆண்டுகள் வரை புதுப்பிக்கப்படலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு. ஜே. பிரகாஷ் என்பவருக்கு பேரூராட்சிக்கு சொந்தமான கடையினை 2016-17 முதல் 2018–19 வரையிலுள்ள 3 ஆண்டுகள் கொண்ட முதல் தொகுப்பிலும், 2019-20 முதல் 2021-22 வரையிலுள்ள 3 ஆண்டுகள் கொண்ட இரண்டாவது தொகுப்பிலும் குத்தகை நீட்டிக்கப்பட்டுள்ள நிலையில், 3வது தொகுப்பான 2022-23 முதல் 2024-25 வரை 3 ஆண்டுகளுக்கு குத்தகையினை நீட்டித்து வழங்கியிருக்க வேண்டும். அதற்கு பதிலாக திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரருக்கு 2022–23ஆம் ஆண்டிற்கு அதாவது ஒரு ஆண்டிற்கு மட்டும் குத்தகையை நீட்டித்து ஆணையிட்டுள்ளார். இத்தகைய குத்தகை காலத்தை 3 ஆண்டுகளுக்கு நீட்டித்து வழங்கக்கோரி 12.3.2022 அன்றே மனுதாரர் பேரூராட்சியில் மனு அளித்திருந்தார். இது குறித்து எவ்வித நடவடிக்கையும் பேரூராட்சியால் மேற்கொள்ளப்படாததால் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு சமர்ப்பித்தவுடன் பேரூராட்சி செயல் அலுவலர் 10.1.2023 நாளிட்ட செயல்முறை ஆணைகள் மூலம் மனுதாரருக்கு கடைசி 3 ஆண்டுகள் கொண்ட தொகுப்பில் 2022–23 முதல் 2024–25 வரையிலான காலத்திற்கு குத்தகைக் காலத்தினை நீட்டித்துள்ளார். அரசாணையின்படி 3 ஆண்டுகளுக்கு கடையின் குத்தகையினை மனுதாரருக்கு நீட்டிக்காமல், முதலில் தன்னிச்சையாக ஒரு ஆண்டிற்கு (2022–23) மட்டும் நீட்டித்தும் பின்னர் அரசாணையின்படி 3 ஆண்டுகள் குத்தகையினை நீட்டித்தும் வழங்கியுள்ளதன் மூலம் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் உள்நோக்கம் மற்றும் பொறுப்பற்ற செயலினை காட்டுகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. இதற்கு பொறுப்பான திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியிலான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், பேரூராட்சிகளுக்கு சொந்தமான கடைகள் குத்தகைக்கு விடப்படும் நேர்வுகளில் அரசாணைகளில் வெளியிடப்பட்ட வழிமுறைகளை பின்பற்றி பொது மக்களிடமிருந்து எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வண்ணம் செயல்பட வேண்டும் என அனைத்து பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்புமாறும் பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Executive Officers of Town Panchayats cannot act as per their whims and fancies with ulterior and unlawful motives in matters such as this. This kind of arrogance, perversion and despotism at the Executive Officers' level cannot be tolerated. The delinquent Executive Officer of Tiruporur Town Panchayat has simply thrown the instructions of the Director of Town Panchayats to the winds and has unleashed his own autocratic behaviour by not adhering to the standard practice of leasing the shop for 3 years but restricting the period for 1 year without any basis before the petitioner moved this Forum. Hence the Director of Town Panchayats is directed to initiate necessary disciplinary action against the delinquent Executive Officer for a

proven omission, wanton abuse of powers and audacious violation of standing instructions and send a report to this Forum within 45 days.

2023–ஆம் ஆண்டு, மார்ச் 15–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. J. பிரகாஷ்,
த/பெ. ஜெயவேல்,
பேருந்து நிலைய தெற்குபுறம் கடை எண்.13,
திருப்போரூர் பேரூராட்சி, செங்கல்பட்டு மாவட்டம் - 603 110.

2) செயல் அலுவலர்
திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம் ,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

15/3/23

செயலாளர்.

15.3.23 8/8

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சென்னை–600 032